ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகா ஞானியரின் 50வது தவசித்தி விழாவில் ஓங்காரக்குடிலின் நிகழ்வும், நடந்த அற்புதங்களும், தொண்டர்கட்கு உண்டான பெருமையும், குருநாதரின் மகிமையும் ஆறுமுக அரங்கமகானின் அருளாசி நூலிலிருந்து ஆசி விளக்கம்

21.09.2025

1. ஆனந்த நடனமிட்ட ஈசன் பாதம்
அடிவணங்கி ஜீவஏட்டில் ஆசி தன்னை
ஞானமதில் ஆறுமுக அரங்கன் யானும்
நாட்டிடுவேன் எந்தனின் தவசித்தி விழாவிற்கும்

2. அன்பர்களின் மேன்மைக்குண்டான இந்த தீட்சை விழாவிற்கும்
இனிதே அருளாசி தன்னை வரமாக
இந்தவித நன்னாளில் அன்பர்கட்காக
அரங்கன் யான் உரைப்பேன்

3. அப்பனே ஓங்காரக்குடிலில் இன்றைய பொழுதில்
கண்டேன் மகத்தான கூட்டம் தன்னை
அரங்கன் யான் கண்டு மகிழ்ந்தேன்
சூட்சுமமாக ஜோதியில் நின்று

4. வரும் அன்பர்கட்கெல்லாம்
அளவில்லா வண்ணம்
பேரானந்த கதிபெற அவரவர்க்கும்
ஆசியும் சூட்சுமமான சக்தியும்

5. தந்தருள் புரிந்தேன் அப்பனே
என் தடத்தில் வந்து சென்ற
மக்கட்கெல்லாம் எல்லா வளமும் வரமும்
அவர்கட்கு நோக்கம் கொண்டு வந்துள்ள

6. செயல்பாடுகள் அத்தனைக்கும் வெற்றியும்
அரங்கன் யான் இன்று வரமாக தந்துள்ளேன்
உள்ளபடி இந்தவித நன்னாளில்
உலகோர்க்கு எந்தனின் ஜோதி வடிவான

7. தீட்சை ஆசியும் பரிபூரணமாய்
வந்த அன்பர்கட்கெல்லாம் கிட்டியுள்ளது
உள்ளபடி அரங்கன் என் தடத்தில்
உயர்வாக என் தவஅறைக்குள்

8. எந்தனது ஜோதி பீடத்தையும்
வந்து வணங்கி என் சீடன்

ராம்குமார் கரம்பட தீட்சை பெற்றோர்க்கெல்லாம்
இன்று அரங்கனும் ஆறுமுகனும்

9. பரிபூரணமாய் சக்தி பெருகும் வண்ணம்
தீட்சையாகவே அருள் புரிந்துள்ளார்கள்
உள்ளபடி இனிதே இந்தவித விழா
ஓங்காரக்குடிலின் தொண்டர் படைகட்கும்

10. உலக மக்களுக்கும் பாதுகாப்புக்கும்
இந்த கலியுகத்தில் எந்தவித
இடர்பாடுகளும் அணுகாத வண்ணம்
மேன்மைக்கும் அவரவர்கட்கு ஞானபலமும்

11. தேகபலமும் மனபலமும் ஆரோக்கியம்பட
எதிர்காலத்தை வெல்லுகின்ற மதிநுட்பங்களும் கூடி
ஜீவனவழி வேண்டி வந்தவர்கட்கு
தொழில் கீர்த்தியும் ஆரோக்கியம்

12. வேண்டுமென வந்தவர்கட்கு பரிபூரண
குணமும் திடமும் திருமணத்தடை
புத்திரவரம் கல்வி கேள்வி ஞானம்
இவ்வாறு வெவ்வேறு நோக்கங்கள் கொண்டு

13. எந்தன் பீடத்தை வந்து இன்று அலங்கரித்து
அடிபணிந்து வணங்கிய குடிலின் என்
அருளமுதும் உண்டு வணங்கிய
அன்பர்கள் அனைத்து பேருக்கும்

14. அரங்கன் யான் எல்லா வரமும்
சித்திக்க இன்று அருள்புரிந்துள்ளேன்
உள்ளபடி இந்தவித அறையிலும்
உகந்தபடி நூலாக வாக்காக

15. உயர்சக்தியாகிய என் அன்பர் பெருமக்கட்கும்
குடிலை நிர்வகிக்கின்ற நிர்வாகிகட்கும்
அரங்கன் யான் பரிபூரண சக்தியூட்டி
உடனிருக்கின்றேன் அன்னதனால்

16. ஓம் முருகா ஓம் அரங்கா என
மனதுள் வேண்டி உயர்வான
ஜெபதபங்கள் புரிந்து அன்னதானம்
என்னும் பெருந்தர்மப் பணியை

17. வகைபட ஏற்று எவரெல்லாம்
தம்மால் இயன்ற வண்ணம்
பொருளுதவி செய்து கொண்டு
உயர்வான இந்த தொண்டிலே

18. உத்தமமான சைவநெறி ஏற்று
தொடர்ந்து அடிபணிந்து வருகின்றாரோ
அவர்கட்கெல்லாம் இந்தவித தீட்சைவிழா
முதலாக அவர்களெல்லாம் இனி பிறவாத

19. பெரும்பேற்றுக்கு உயர்கதி பெற்றுவிட்டனர்
என்பேன் அன்னதனால் அவர்கட்கு
கர்மவினை நீக்கமோடு தான் வந்த
நோக்கத்தை உறுதிபட புரிந்து கொள்ளும் வண்ணமும்

20. உயர் ஞானமோடு அவர்கட்கெல்லாம்
சூட்சுமமாக மெய்ஞான தீட்சையும்
அவர்கள் மேல்நிலை பெற்று
இனி எந்த சூழலிலும்

21. தீதான வழிகட்கு செல்லா வண்ணம்
சர்வபாதுகாப்புக்கு இன்று அரங்கன் யான்
சூட்சும தீட்சை வழங்கியுள்ளேன்
உள்ளபடி ஓங்காரக்குடிலின் நிர்வாகம்

22. மிகச் சிறப்பாகவே அரங்கன் என்
ஆசி அனுகூலத்தோடு நடந்து வர
இன்று குடிலின் அருளமுதும்
அருமருந்தாக பெருஞ்சக்தி பெற்று

23. சுவையும் நிறைவும் கலந்து இருக்க
இந்த நிர்வாகத்தின் பாங்கு கண்டு
அரங்கன் யான் மகிழ்ந்து
இன்று ஆசி தருகின்றேன்

24. அன்பர்களுக்கும் குடில் தொண்டு
தொடர்பு கொண்டு வெளி கிளைச்சங்கங்களில்
இருந்து வருபவர்கட்கும்
உள்தொண்டு புரிபவர்கட்கும்

25. வெளி வசூல் பணிகட்கு
சென்று வருபவர்கட்கும்

சர்வ பாதுகாப்பும் பயண பாதுகாப்பும்
அவர்களுடைய ஆரோக்கியத்தோடு

26. அவர்களை சார்ந்துள்ள குடியவர்கட்கும்
சர்வ பாதுகாப்பும் தந்து அரங்கன் யான்
பரிபூரண துணையாய் நின்று
பேரருள் புரிகின்றேன் இந்த ஐம்பதாவது

27. தீட்சை விழா உலகோர்க்கு
பல சித்திகளை தருகின்றதோடு
வருகின்ற காலங்களில் அரசியல்களிலும்
மாற்றம் புரிகின்ற மகத்துவமான விழாவாக

28. அரசியல் மாந்தர்களும் என் தடத்தை
வந்தணுகி அவர்கட்கு உண்டான
ஞானதீட்சை பெற்று இனி
ஆசாபாசம் என்கின்ற அந்த பந்தவலைக்குள்

29. பொருளாசை வலைக்குள் அகப்படா
அவர்களும் மீண்டு வருகின்ற காலமெல்லாம்
சேவை நிரம்பிய நல்லாட்சிகளும்
ஞான ஆட்சியும் உலகில் மாற்றம்

30. நடக்க உண்டான உயர்வான விழாவாகும்
இந்த விழா அன்னதனால்
இதில் அன்பர்கள் ஒன்றிணைந்து
வேண்டல் வைத்த உலக சேமம்

31. அத்தனையும் உயர்வாக இனிதே நடந்தேறும்
அரங்கன் யான் மகிழ்ந்தும்
என்னோடு ஆறுமுகனாரோடு
அகத்தியர் புஜண்டர் பதினெட்டு சித்தர்

32. பெருமக்கள் இதனோடு நவகோடியர்களும்
நவகிரக நாயகர்களும் நாயன்மார்களோடு
ஆழ்வார் பெருமக்களும் இவர்களல்லாமல்
பஞ்சமகா சக்திகளும் கலந்து

33. இந்த குடிலில் சூட்சுமமாக
அற்புதமான ஆக்க சக்தி தந்துள்ளனர்
அன்னதனால் இன்று வந்தோர்க்கெல்லாம்
பேரானந்த கதி உண்டு

34. இதுவரை குடிலுக்கு வாராமல்
இன்று வந்தவர்க்கெல்லாம் கூட
அவர்கள் நெடுங்காலம் குடில் தொடர்பில்
இருந்த வண்ணம் வல்லமையான

35. சக்தியும் வரமும் கண்டு சிறப்பரப்பா
அப்பனே ஆனந்தம் ஆனந்தம்
இந்த விழாவில் தொண்டர்கள் தொண்டும்
அன்பர்கள் உதவிபட வந்தோர்கள் தொண்டும்

36. பொருளுதவி செய்து கொண்டு மனம்
மகிழ்ந்த அன்பர்களின் தொண்டும்
அனைத்தும் கண்டு வியந்து
அரங்கன் யான் ஆசி தருகின்றேன்

37. ஓங்காரக்குடிலின் செயல்பாடுகளும்
சன்மார்க்க சங்க கிளை சங்கங்களின்
அத்தனை பேர்களின் செயல்பாடுகளும்
இன்னும் மேன்மேலும் சிறந்து

38. உலக மாற்றத்துக்கே வழிவகுக்கும்
இது என்று கூறி அரங்கன் யான்
இந்த நாளில் அருளாசி தன்னை
அன்பர்கட்கு மனம் மகிழவும்

39. எனை தேடி வந்து
அரங்க மகான் எந்த சூழலில்
எந்த விதத்தில் அருள் புரிகின்றார்
என உணர என கேட்டு

40. நிற்கின்ற சூட்சும கேள்விகட்கும்
இன்று பதிலாகவே அரங்கன்
அருட்சுவடி வழி அருளாசியாக
பதில் அளித்துள்ளேன் உள்ளபடி அன்பர்களெல்லாம்

41. என் நாமஜெபம் செய்தால் போதும்
உயர்வான தர்மத்தை செய்து
சைவநெறியில் வந்தால் போதும்
அவர்களோடு அவர் வழி நட்பு

42. தொடர்பு உறவு என வரும் எல்லோர்க்கும்
பிறவாப் பெரும் பேறு கிட்டுமெனக் கூறி

ஆசான் யான் இந்த
அருளாசி தன்னை முடிக்கின்றேன்

43. இனிதே அன்பர்கட்கும் குடில் தொண்டர்கட்கும்
நிர்வாகிகட்கும் சகல அன்பர்கட்கும்
அரங்கன் என் பரிபூரண ஆசி உண்டு
ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி